# பொதுத்தேர்தல் 2020: அரசியல் தொடர்பான தகவல்களை அறிய உடனடிக் குறுஞ்செய்தி அனுப்பும் செயலிகள், சமூக ஊடகங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டன

*செய்தி,* 8 அக்டோபர் 2020

பொதுத்தேரதலின்போது, உடனடிக் குறுஞ்செய்தி அனுப்பும் செயலிகள், சமூக ஊடகங்கள் ஆகிய இரண்டுமே அரசியல் தொடர்பான விவகாரங்களைத் தெரிந்துகொள்ள அதிகம் பயன்படுத்தப்பட்டதாய்க் குறிப்பிடப்பட்டது.

கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்த இணையச் சந்திப்பு ஒன்றில் ஆய்வாளர்கள் அதனைத் தெரிவித்தனர்.

சிங்கப்பூரின் அண்மையப் பொதுத்தேர்தலில் கற்றுக்கொண்ட சில அம்சங்களை அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.

Whatsapp, Facebook messenger ஆகிய சேவைகள், மூத்த வாக்காளர்களிடையே பிரபலமானதையும் ஆய்வாளர்கள் சுட்டினர்.

கொள்கை ஆய்வுக் கழகம், பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடத்திய ஆய்வில் அவை தெரிய வந்தன.

சமூக ஊடகங்களில் வாக்காளர்கள் தெரிவிக்கும் கருத்துகளைக் கொண்டு எதிர்காலத்தில் நல்ல பிரசார வழிமுறைகளை உருவாக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.